பக்கங்கள்:-17

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 15 | புதன்கிழமை | 30.08.2023 | அதிர்வு 29 |
| --- | --- | --- | --- | --- | --- |

## போதைப்பொருளுடன் தீவக மாணவன் கைது

யாழ்ப்பாணம், தீவகப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் மாவா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளான்.

அந்த மாணவன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய 04▶

# பொதுவேட்பாளர் என்ற பேச்சுக்கு இடமில்லை வாடகைக்கு வேட்பாளரைப் பெறவும் மாட்டோம்

### கட்சியின் உறுப்பினரையே களமிறக்குவோம் என்கிறது மொட்டு ராஜபக்ஷ்க்களை வீழ்த்தவே முடியாது எனவும் ரோஹித சூளுரை



"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாள ராகக் களமிறக்குவோம். பொதுவேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை. அத்துடன் வாடகைக்கு வேட்பாளரைப் பெற வேண்டிய தேவையும் எமக்குக் கிடையாது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பயாகலை பகுதியில் 04▶

# எவர் களமிறங்கினாலும் ரணில் வெல்வது உறுதி



### மொட்டுவில் ஒரு தரப்பினரின் பித்தலாட்டம் இங்கு எடுபடாது என்று ஹரின் தக்க பதிலடி

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மூன்றெழுத்து கொண்ட ராஜபக்ஷ உறுப்பினரோ அல்லது சஜித் பிரேமதாஸவோ அல்லது டலஸ் அழகப்பெருமவோ அல்லது அநுரகுமார திஸாநாயக்கவோ கள மிறங்கினாலும் ரணில் விக்கிரமசிங்க வெல் வது உறுதி. அவரை எவராலும் தோற்கடிக்க முடியாது."

- இவ்வாறு அடித்துக் கூறினார் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ. 02▶



# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரிய ஜனநாயகப் போராட்டங்கள் வடக்கு - கிழக்கில் இன்று முன்னெடுப்பு!

### தமிழ் அரசுக் கட்சி முழு ஆதரவு

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான இன்றைய நீதி கோரிய ஜனநாயகப் போராட்டங்களுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் 04▶


# தையிட்டியில் மீண்டும் போராட்டம் கஜேந்திரகுமார் எம்.பியும் களத்தில்



– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், தையிட்டியிலுள்ள சட்டவிரோத பௌத்த விகாரையை அகற்ற வேண்டும் என வலியுறுத்தியும், பொதுமக்களின் காணிகளை உரிமையாளர்களிடம் 04▶

## இரகசியம் / பரகசியம்



பொருளாதார மீட்சி கிட்டாது என்ற அச்சத்தில் மூழ்கிக் கிடக்கும் இலங்கை நாடு மற்றைய இரண்டு துறைகளிலும் புதிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றமை கண்கூடு.

ஒன்று – ஜனநாயகம். அதற்கு சாவு மணியோ 03▶

# பிரசன்ன ரணிலின் ஆளா?

## அவரே விளக்கம்



"இப்போது நான் ரணிலின் ஆள் என்று சிலர் கூற முற்படுகின்றனர். எனது பயணம் தொடர்பில் கம்பஹா மாவட்ட மக்களுக்குத் தெரியும்."

– இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கிராம மட்டத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களின் பலத்தில் இருந்து உருவாக்கப்பட்டது.

கட்சித் தலைவர்கள் ஒன்று கூடி, கட்சியை உருவாக்கி, கிராம அளவில் உறுப்பினர்களைச் சேர்க்கும் கட்சியல்ல இது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு கிராமத்திலிருந்து பத்து உறுப்பினர்களைச் சேர்த்து, அந்த பத்து பேரை இன்னும் பத்து பேரை சேர்த்துக் கொள்ளச் சொல்லி, கிளைகளை உருவாக்கி வளர்க்கப்பட்டது.

இப்போது யார் கதையளந்தாலும் அன்று 2015இல் ஏற்பாடு செய்யப்பட்ட நுகேகொட மேடையில் ஏறுவதற்கு யாரும் இருக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ மாகாண முதலமைச்சர்களை விட்டு வெளியேறிய போது நான் மட்டுமே முதலமைச்சராக மேடையில் நின்றிருந்தேன்.

அந்தப் பலத்தை எனக்கு மேல் மாகாண சபை சில உறுப்பினர்களும் உள்ளூராட்சி சபைகளின் சில உறுப்பினர்களும் ஆதரவு தந்தார்கள். அப்போது அந்த அணி இல்லை என்றால் எனக்கு அந்தப் பலம் இருந்திருக்காது. நாடு முழுவதிலும் உள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்களால் மஹிந்த காற்றின் கூட்டத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கட்சியின் கிளைகளை நிறுவினர். எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள எமக்கு கட்சியைப் பாதுகாக்கப் பெரும் உரிமை உள்ளது. மஹிந்த மீண்டும் அரசியலுக்கு வருவார் எனக் கூறிய போது பஸில் ராஜபக்ஷவின் அமைப்பு கட்சியை நாடளாவிய ரீதியில் வழிநடத்தியது.

அந்த அமைப்பு பலத்தினால்தான் ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் வாக்குகள் வெற்றி பெற்று நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு வித்தியாசத்தில் வெற்றி பெற முடிந்தது. துரதிஷ்டவசமாக இந்த நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க நேர்ந்தது.

அது எங்களால் ஏற்படவில்லை. முப்பது வருட யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் அழிந்தது. கறுப்பு ஜூலை 83, 88/89 பயங்கரவாதம், போராட்டம் மற்றும் இயற்கைப் பேரழிவுகள் பொருளாதாரத்தை அழித்தன. அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 88/89 பயங்கரவாதத்தை அவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள் என்பது மக்களுக்கு நினைவிருக்கலாம்.

பின்னர், கொரோனாத் தொற்றுநோயால் முழு நாட்டையும் மூட வேண்டியிருந்தது. அப்போது நாட்டை மூட வேண்டாம் என்றார்கள். மீண்டும் நாட்டை திறக்க முற்பட்ட போது மக்கள் செத்து மடிவார்கள் என்று கூறி நாட்டைத் திறக்க வேண்டாம் என அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர்.

ஆனால் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாக்கத் தடுப்பூசிகளை வழங்கிய பின்பே நாட்டைத் திறந்தார். எனக்கு இப்போது அது நினைவில் இல்லை. நாட்டின் பொருளாதாரம் சரிந்தது எங்களால் அல்ல. ரஷ்ய – உக்ரைன் போரால் பல நாடுகள் பாதிக்கப்பட்டன.

கொரோனாத் தொற்றுநோய்க்குப் பிறகு, சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குத் திரும்பத் தொடங்கியபோது போராட்டம் தொடங்கியது.

மஹிந்தவும், கோட்டாபயவும் தமது பதவிகளை விட்டு விலகிய போது, நாட்டைக் பொறுப்பேற்குமாறு நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களை அழைத்தோம். ஆனால், ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இந்தச் சவாலை ஏற்க முன் வந்தார்.

அந்த நேரத்தில், கட்சியாக நாங்கள் அவருக்கு உதவ முடிவு செய்தோம். அதன் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் எம்மால் ஆக்க முடிந்தது. மக்கள் எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் நின்றனர். பொருட்கள் குறைவாக இருந்தன.

ரணில் விக்கிரமசிங்கவால் ஒரு வருடத்துக்குள் நாட்டை மீட்டெடுக்க முடிந்தது. அதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால், மக்கள் விரும்பாத சில முடிவுகளுக்கு நாம் கைதூக்க வேண்டியுள்ளது.

நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியதும் கட்சி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க நினைத்தோம். அன்று எமது அரசை அழித்தவர்கள் இன்று ஊடகங்களுக்கு வந்து ஒரு அறிக்கை விடுகின்றார்கள். இப்போது நான் ரணிலின் ஆள் என்று சிலர் கூற முற்படுகின்றனர். எனது பயணம் குறித்து கம்பஹா மாவட்ட மக்களுக்குத் தெரியும்.

எனது வெற்றியைப் பற்றி நான் நினைக்கவே இல்லை. நான் எப்போதும் மொட்டுவை வெற்றி பெறச் செய்யுமாறு மக்களிடம் சொன்னேன். மற்றபடி எனக்கு விருப்பு வாக்கு கேட்கவில்லை. நாம் இன்றும் மஹிந்தவுக்காக நிற்கின்றோம்.

நாங்கள் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவை நேசிக்கின்றோம். மஹிந்த போரை முடித்து நாட்டை விடுவித்தமையால் நாங்கள் அவரை நேசிக்கின்றோம். யார் என்ன சொன்னாலும் இந்தக் கட்சியைப் பாதுகாத்து முன்னேற்றுவது நமது பொறுப்பு. ஆறு அடிகள் முன்னோக்கி வைக்கப் பார்த்து ஒரு அடி பின்னோக்கி வைத்தோம். எனவே, இந்தக் கட்சியை பலப்படுத்தினால் அடுத்த தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளருக்கு எங்களது ஆதரவு கண்டிப்பாகத் தேவைப்படும். நாங்கள் அதற்காக அர்ப்பணித்துச் செயற்படுவோம்." – என்றார்.

## எவர் களமிறங்கினாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதித் தேர்தலைக் குறிவைத்து மொட்டுக் கட்சியில் ஒரு தரப்பினர் பித்தலாட்ட வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர். இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி வன்முறையைத் தூண்ட முயல்கின்றனர். அவர்களின் இந்தப் பித்தலாட்டம் – வெறித்தனங்கள் இங்கு எடுபடாது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சிகளில் பெரும்பாலான உறுப்பினர்களும் நிற்கின்றனர். அதைவிட தமிழ், முஸ்லிம் கட்சிகளைச் சார்ந்தவர்களும் ரணிலையே ஆதரிக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளிவந்தவுடன் இதன் உண்மை நிலைவரம் பகிரங்கமாகத் தெரியவரும். இப்போது வாய்ச் சவடால் விடுபவர்கள் அப்போது மௌனமாகி விடுவார்கள்.

படுகுழியிலிருந்து இலங்கையை மீட்டெடுத்து வரும் ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டுமென நாட்டு மக்கள் விரும்பும்போது அதற்குச் சவாலாகத் தேர்தலில் எவர் களமிறங்கினாலும் அவர்கள் தோற்பது உறுதி. ரணிலை எவராலும் தோற்கடிக்க முடியாது." – என்றார்.

# மகா நாயக்கர்களிடம் ஆசி பெற்றார் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் மல்வத்து, அஸ்கிரி மகா நாயக்க மற்றும் அனுநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்.

முதலில் மல்வத்து மகாவிகாரைக்கு வருகை தந்த ஜனாதிபதி, மல்வத்து பீடத்தின் மகாநாயக்க வண. திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரைச் சந்தித்து நலம் விசாரித்தமையுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். அதனையடுத்து தேரர், பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மல்வத்து பீடத்தின் அனுநாயக்க வண. திம்புல்கும்புரே ஸ்ரீவிமலதம்ம தேரரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

அதன் பின்னர் அஸ்கிரி மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அஸ்கிரி பீடத்தின் மகா நாயக்க வண. வரகாகொட ஸ்ரீஞானரத்ன தேரரைச் சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

வரலாற்று சிறப்புமிக்க முதியங்கனை ரஜமகா விகாரையின் பொறுப்பாளர் கலாநிதி வண. முருந்தெனியே ஸ்ரீதம்மரதன நாயக்க தேரரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.



அதனையடுத்து ஜனாதிபதி, அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க தேரர்களான, வண. ஆணமடுவே தம்மதிஸ்ஸி தேரர் மற்றும் வண. வெடருவே உபாலி தேரர் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்ரம, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கமல் புஷ்பகுமார ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# சிசுவின் கழுத்தில் கத்தியை வைத்து சண்டிலிப்பாய் பகுதியில் கொள்ளை

## நேற்று அதிகாலை நடந்த கொடூரம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை முகமூடி அணிந்தபடி, வீடுடைத்து உட்புகுந்த நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து, 11 பவுண் நகை, 3 தொலைபேசிகள் மற்றும் இரண்டு லட்சம் ரூபா பணம், மோட்டார் சைக்கிள் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

மாகியப்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் கணவன் - மனைவி இரு சிறுபிள்ளைகள் இருந்த நிலையில் வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்த முகமூடிக் கொள்ளையர்கள், பிறந்து நான்கு மாதமேயான குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து, வங்கி புத்தகங்கள், பெறுமதியான 3 தொலைபேசிகள் ,11பவுண் நகை, இரண்டு லட்சம் ரூபா காசு என்பவற்றைக் கொள்ளையடித்து பின்னர் பொலிஸாருக்கு அறிவித்தால் பின் விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் எனத் தெரிவித்து வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் நால்வரும் தப்பி சென்றுள்ளனர்.

விடயம் மானிப்பாய்ப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற அச்சம் எழுந்துள்ளது.

மற்றையது - நீதித்துறை. அதுவும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் இக்கட்டு.

இந்த இரண்டு துறைகளிலும் அச்சத்தில் இருந்து நாட்டை மீட்கும் எத்தனைங்களில் சம்பந்தப்பட்ட தரப்புகள் மும்முரமான முயற்சியில் இறங்கி இருக்கின்றன.

'ஜனநாயக மீட்சி மூலம் பொருளாதார மீட்சி' என்ற கோஷத்தை முன்னிலைப்படுத்தி சிவில் சமூக அமைப்பு ஒன்று தனியாக இயங்கத் தொடங்கி இருக்கின்றது.

மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள், தொழில் வாண்மையாளர்கள், கல்வியியலாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், இளம் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய செல்வாக்காளர்கள் எனப் பலர் இணைந்து எமது நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் நேற்று கொழும்பில் இலங்கை மன்றக் கல்லூரியில் ஒன்று கூடி செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளனர்.

இதேசமயம் 2012 களில் - அப்போதைய இருண்ட யுக ஆட்சியின் இரும்பு பிடியின் கீழ் இருந்து நீதித் துறையை மீட்பதற்காக செயல்பட்ட 'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' என்ற அமைப்பும் நேற்று முதல் மீண்டும் செயல்படத் தொடங்கியிருப்பதாக கொழும்பில் செய்தியாளர்களைக் கூட்டி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சட்டத்துறையில் முக்கிய பங்கு வகித்த ஜயம்பதி விக்ரமரட்ண, சாலிய பீரிஸ், உபுல் ஜெயசூரிய, லால் விஜேநாயக்க, சுமந்திரன் போன்றவர்கள் இதில் இணைந்துள்ளார்கள். முன்னர் இந்த ஒன்றிப்பில் செயல்பட்ட சட்டத்தரணி வெலியமுன இப்போது அதில் இல்லை. அவர் வெளிநாட்டில் தூதுவர் நிலையில் இருக்கின்றார்.

ஜனாதிபதி, சபாநாயகர் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் அண்மைக்காலக் கருத்துக்கள் நீதித்துறையின் சுதந்திரம் அல்லது சுயாதீனத்துக்கு ஆப்பு வைக்கும் அல்லது அச்சுறுத்தும் போக்கிலானவை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. சுயாதீனமாகச் செயல்பட வேண்டிய தேர்தல் ஆணைக்குழு, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள் இலக்கு வைத்து அச்சுறுத்தப்படுகிறார்கள்.

இவை நீதித்துறை மீதான இலக்கு வைத்த தாக்குதல்கள் ஆகும். அத்தகைய அச்சுறுத்தலில் இருந்து நீதித்துறையை காப்பாற்றுவதற்கான எத்தனமாகவே 'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' என்ற இந்த அமைப்பு மீளச் செயல்படுத்தப்படுவதாக நேற்றுப் பத்திரிகையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

எது, எப்படியாயினும் ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களின் எழுச்சி 'அரகலய' போன்ற கிளர்ச்சியாக உருவெடுக்காத வரை, அடக்குமுறை ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்துவது அல்லது ஒழுங்குக்குக் கொண்டு வருவது என்பது கஷ்டமானது அல்லது சாத்தியமற்றது.

## போதைப்பொருளுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிலையில் மாவா போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றான் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இந்நிலையில் அந்த மாணவனை நேற்றுக் கைது செய்த ஊர்காவற்றுறைப் பொலிஸார், மேலதிக விசாரணைகளின் பின்னர் மாணவனை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தையிட்டியில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடச்சி..)

ஒப்படைக்க வேண்டும் எனக் கோரியும் மீண்டும் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காண்பிக்கும் வகையில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஒன்றிணையுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிரான போராட்டத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், நேற்று மற்றுமொரு கட்டப் போராட்டத்தை மாலை 4 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பித்துள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி., ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஷ் ஆகியோருடன் கட்சியின் உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த தினமான இன்றைய போயாபொதுவிடுமுறையைமையப்படுத்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடுகளுக்கு எதிராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொள்கை அடிப்படையில் ஜனநாயக ரீதியாகவும் சட்ட ஒழுங்குகளை மீறாத வகையிலும் போராட்டக் கலாசாரத்தை முன்னெடுத்து வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் போராட்டம் இன்று மாலை 7.00 மணி வரை தொடரும் என்று முன்னணி அறிவித்துள்ள நிலையில், விகாரை அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## நீதி கோரிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இரா.சாணக்கியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தினம் இன்று (ஓகஸ்ட் 30) உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதையொட்டி எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி கோரிய ஜனநாயகப் போராட்டங்கள் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

எமது மட்டக்களப்பு மாவட்டத்திலும் நீதி கோரிய போராட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. சமூக அமைப்புக்களால் இன்று முற்பகல் 9.00 மணிக்கு கல்லடிப் பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரை நடைபவனியாக இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதற்கான முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தமிழரசுக் கட்சி வழங்குகின்றது. இன்றைய தினம் உணர்வுபூர்வமான எமது உரிமைப் போராட்டத்தில் அனைவரும் கலந்துகொண்டு போராட்டத்துக்குப் பலம் சேர்க்குமாறு உரிமையோடு எமது உறவுகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

## பொதுவேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகியமையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காகவே நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவு செய்தோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசைத் தோற்றுவித்துள்ளதால் எமது கட்சியின் கொள்கைகளை விட்டுக் கொடுக்க முடியாது.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து இதுவரை எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கவுள்ளது எனக் குறிப்பிடப்படும் செய்தி அடிப்படையற்றது.

வாடகைக்கு வேட்பாளரைப் பெற வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. எமது கொள்கைகளை முன்னிலைப் படுத்தும் வேட்பாளரைக் களமிறக்குவோம்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள கட்சியின் வருடாந்த மாநாட்டில் முக்கிய அரசியல் தீர்மானங்களை அறிவிப்போம். கட்சியைப் பலப்படுத்தும் வகையில் பல தீர்மானங்களைத் தற்போது முன்னெடுத்துள்ளோம். மக்கள் மத்தியில் ராஜபக்சக்களுக்கு உள்ள செல்வாக்கை ஒருபோதும் இல்லாதொழிக்க முடியாது. ராஜபக்ஷக்களை எந்தச் சக்தியாலும் வீழ்த்தவே முடியாது." - என்றார்.


தேவை
கல்வி சம்பந்தமான
You tube chanel இற்கு
ஆங்கிலப் பேச்சுத் திறமையுள்ள
presenter தேவை.
ஆங்கிலத்தில் சரளமாக
உரையாற்றவும் எழுதவும்
கூடியவர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்.
0752604360



# நல்லூரான் 9 ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் ஒன்பதாம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி, தெய்வானை சமதேராக, முருகப்பெருமான் யானை வாகனத்தில் வீதியுலாவந்தார்.

படங்கள் - பிரபாகன் டிலக்சன்










# இலங்கையின் பொருளாதார மீட்சி ஜனநாயகத்திலேயே தங்கியுள்ளது

## ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு விளக்கம்

பொருளாதார மீட்சியானது ஜனநாயகத்திலே உள்ளடங்குகிறது எனச் சுட்டிக் காட்டியுள்ள ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு அது தொடர்பில் விளக்க அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற அந்த அமைப்பின் கூட்டத்தின் பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் அந்த அமைப்பு ஒரு விளக்க அறிக்கையையும் வெளியிட்டது. அதில் கூறப்பட்டிருந்த விடயங்கள் வருமாறு:-

"ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு" ஆனது ஜனநாயகத்திற்காக உறுதுணையாய் நிற்பது என்பதனால் அறியப்படுகிறது. அதனடிப்படையில் மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள், தொழில்வாண்மையாளர்கள், கல்வியியலாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், இளம் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய செல்வாக்காளர்கள் என பலர் இணைந்து எமது நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் (Sri Lanka Foundation Institute) ஒன்று கூடினர்.

உண்மையான மற்றும் சமமான பொருளாதார மீட்சியை உறுதி செய்வதற்காக, அரசாங்கத்தின் அடக்குமுறையை நிறுத்தவும் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்த அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கருத்துச் சுதந்திரம், தகவல் அறியும் உரிமை, கருத்து வேறுபாட்டு உரிமை, போராட்டஅல்லதுஎதிர்ப்பதற்கானஉரிமை, ஒன்று கூடுவதற்கான உரிமை போன்ற அரசமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளுக்கு எதிராகவும் ஜனநாயகத்திற்கு எதிராகவும் மேற்கொள்ளப்படுகின்ற அடக்குமுறை தொடர்பில் ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பானது தீவிர கரிசனையினை செலுத்தி வருகிறது. மேலும், எதிர் அரசியல் கட்சியினர், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை குறிவைக்கும் வகையில் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் (ICCPR) மற்றும் சர்ச்சைக்குரிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் (PTA) உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் (UNHRC) விதிகளையும் ஆட்சியாளர்கள் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒலிபரப்பு ஆணையச் சட்டம் மற்றும் அரச சார்பற்ற தன்னார்வு தொண்டு நிறுவன சட்டம் போன்ற சட்டங்களின் ஒடுக்குமுறையான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அண்மைக்கால முயற்சிகள் ஜனநாயகத்திற்கு எதிரான அச்சுறுத்தல்களுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

ஜனாதிபதி, சபாநாயகர் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் அண்மைய கருத்துக்கள் நீதித்துறையின்




சுதந்திரம் அல்லது சுயாதீனத்தினை குழிதோண்டி புதைக்க முயல்கின்றன. 21ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்கள் மீண்டும் நிறுவப்பட்டுள்ள அதேவேளை, தேர்தல் ஆணைக்குழு மற்றும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு உறுப்பினர்களை இலக்கு வைத்து அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள் இந்த ஆணைக்குழுக்களை முடக்க மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும். அதனடிப்படையில், நிதிப் பற்றாக்குறையினை ஒரு கேடயமாக பயன்படுத்தி நாட்டு மக்களின் வாக்களிக்கும் இறையாண்மை உரிமை மீறப்பட்டுள்ளது. இது நம்பகத்தன்மை அற்ற விளக்கமாகும். தற்பொழுது குடிமக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. அதேபோன்று இந்த அதிகார சபைகள் நாட்டின் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் தேர்தல்களினால் தேர்ந்தெடுக்கப்படாத அதிகாரிகளினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இது விரைவாக கவனிக்கப்படாவிடின் இலங்கை ஜனநாயக நாடு என்ற வரையறை கேள்விக்குறியாகி விடும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்டெடுக்க அதன் மூலக் காரணமான மோசமான நிர்வாகம் மற்றும் ஊழல் ஆகியவற்றை நிவர்த்தி செய்வது அவசியமாகும். இந்த அடிப்படை பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடின், முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும் பொருளாதார மீட்சிக்கு இடையூறு விளைவிக்கும் ஒரு சிக்கலான முதலீட்டுச் சூழலாக இலங்கை தொடர்ந்தும் கருதப்படும்.

ஊழலை தடுக்கவும் நல்லாட்சியை உறுதிப்படுத்தவும் அரச நிர்வாக செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வது அவசியமாகும். மக்கள் தமது பிரதிநிதிகளையும் பொதுவளங்களின் பொறுப்பு வாய்ந்தவர்களையும் பொறுப்புக்கூற வைக்க, பொதுமக்கள் தங்களின் ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தக் கூடியதாக காணப்பட வேண்டும். ஓர் உண்மையான ஜனநாயக முறைமையானது பொதுமக்கள் தமது பிரதிநிதிகளை தேர்தெடுக்கவும் வாக்களிக்கவும் அவர்களின் வாழ்க்கையில் தாக்கத்தினை ஏற்படுத்தும் அனைத்து அரச தீர்மானங்கள் தொடர்பில் அறிவிக்கப்படவும் அதேபோன்று தீர்மானங்களில் பங்கேற்றுக் கொள்ளவும் அவற்றுக்கு ஆட்சேபனை தெரிவிக்கவும் தமது கருத்துக்களை தெரிவிக்கவும், ஒன்று சேரவும் மற்றும் தீர்மானங்களுக்கு எதிராக அழுத்தம் கொடுக்கவும் முடியுமாக இருத்தல் வேண்டும். மக்களின் நலனுக்காக செயல்படும் அரசாங்கம், பொருளாதாரத்தினை மேம்படுத்த தனது முயற்சியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொது கண்காணிப்புக்கு தங்களை வெளிப்படுத்த தயங்காது.

இந்தக் கொள்கைகளுக்கு இணங்க, ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பானது ஜனநாயகத்தின் அடிப்படை கொள்கைகளை நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறது:

✪ சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்துவதை உறுதி செய்தல். உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடாத்துதல்.

✪ கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடலுக்கான உரிமை மற்றும் தகவல் அறியும் உரிமை போன்ற அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுதல்.

✪ பொதுமக்களின் ஜனநாயகம் மற்றும் சிவில் சமூக செயல்பாடுகளுக்கான சூழலை உருவாக்குதல்.

✪ பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளில் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் பங்களிப்பினை உறுதி செய்தல்.

✪ அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலூடாக பொது கண்காணிப்பினை உறுதி செய்தல்.

✪ சுயாதீன ஆணைக்குழுக்கள் தமது செயற்பாடுகளை சுயமாக மற்றும் திறம்பட நிறைவேற்ற அதிகாரமளித்தல்.

✪ ஊழலுக்கு எதிரான அத்தியாவசிய சீர்திருத்தங்களை செயல்படுத்த சிறந்த முயற்சியினை மேற்கொள்ளல்.

✪ தண்டனை வழங்கப்படாத ஊழல் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டு வர கடந்த கால மற்றும் தற்போதைய ஊழல்சார் செயற்பாடுகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மறுக்கப்படும் நீதி

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம் இன்று ஓகஸ்ட் 30 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உலகின் பல நாடுகளிலும் பல்வேறு காரணங்களுக்காகவும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு நாளாக இது அனுஷ்டிக்கப்படுவது முக்கியமான தாகும்.

அந்த வகையில் இலங்கையின் வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள், தங்களது பல்லாயிரம் உறவுகளை இப்படி வலிந்து காணாமலாக்கப்பட்ட சூழ்நிலையில் பறிகொடுத்துத் தொலைத்து விட்டு ஒன்றரை தசாப்த காலமாகத் தேடி அலையும் பேரவலம் இங்கு நீடிக்கின்றது.

அந்தக் காரணத்தினால் இன்று அனுஷ்டிக்கப்படும் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம் மற்றைய நாடுகளிலும் விட இலங்கைத் தீவுக்கு முக்கியமானதாக அமைகின்றது.

படையினரால் கைது செய்யப்பட்டோர், கடத்தப்பட்டோர், அவர்களிடம் சரணடைந்தோர் என்று பல்லாயிரம் இளைஞர், யுவதிகள் என்னவானார்கள் என்று தெரியாத மனிதப் பேரவலம் இங்கு நீடிக்கின்றது.

அவர்களின் பெற்றோரும், உற்றார், உறவினர்கள், உடன்பிறப்புகள் என இரத்த உறவினர்களும், நண்பர்களும், அயலவர்களும் அவர்களுக்கு என்ன வாயிற்று, அவர்கள் மீள வருவார்களா அல்லது காணாமல்போனோர் என்ற பெயருடன் விடயம் நிரந்தரமாக முற்றுப்பெற வைக்கப்பட்டு விடுமோ என்ற ஏக்கத்துடனும் அவலத்துடனும் காலத்தை ஓட்டியபடி கலங்கி நிற்கின்றனர்.

இப்படிப் பல்லாயிரம் பேர் காணாமலாக்கப்பட்ட விடயத்தில் ஒவ்வொருவருக்கும் என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

பின்னர் அவ்விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். காணாமலாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். பொறுப்பு கூறல் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதனைத் தொடர்ந்து இழப்புக்கள், பாதிப்புகளுக்கு இழப்பீடுகள் வழங்கப்படுவதோடு, இத்தகைய கொடூரங்கள் மீள நிகழாத விதத்தில் விடயங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை இவ்விடயங்களில் பல்லாயிரம் பேர் கூண்டோடு காணாமலாக்கப்பட்ட விவகாரத்தில் உண்மைகள் கண்டறியப்பட்டு, பகிரங்கப்படுத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட்டு, தவறு இழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பொறுப்பு கூறல் நிறைவேற்றப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமைக்கான பொறிமுறை உறுதி செய்யப்பட்டால் மட்டுமே காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் சரியான தீர்வு கிட்டியதாக நம்ப முடியும்.

ஆனால், இலங்கையைப் பொறுத்த வரை தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட கொடூரத்துக்குக் காரணமான இலங்கை அரசு, தனது அடக்குமுறை அதிகாரத்தின் உண்மை முகத்தை மறைப்பதற்காக இவ்விடயங்களில் எந்த முன்நகர்வுக்கும் இடமளிக்காமல் முட்டுக்கட்டை போட்டு, வெறுமனே காலத்தை இழுத்தடித்து நிற்கின்றது.

அதுவே காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் தமிழர்களுக்கான நீதி, நியாயம் கிடைக்காமைக்குப் பிரதான காரணமாகும்.

# எய்ட்ஸ் தொற்று அதிகரிப்பு

2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுப் பகுதியில் இலங்கையில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது.

2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் 2023ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியிலேயே எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது.

தேசிய எஸ்டிடி – எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம்இந்த விவரங்களை வெளியிட்டுள்ளது.

இரண்டாவது காலாண்டு பகுதியில் 181 புதிய எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இக்காலப்பகுதியில் புதிதாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் 26 ஆண்களும் 3 பெண்களும் 15 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்கள். ஏனையவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இதேகாலாண்டு பகுதியில் எயிட்ஸினால் 13 உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளன.

# அரச இல்லத்திலிருந்து சன்ன ஜயசுமனவை வெளியேற்ற உத்தரவு



அரசாங்க இல்லத்தில் பலவந்தமாகத் தங்கியிருக்கிறார் எனக் கூறப்படும், முன்னாள் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவை வெளியேற்றுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அமைச்சர் பதவியை விட்டு வெளியேறிய பின்னரும் உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து குற்றம் சாட்டப்பட்டவரை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்குமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீதிவான் நீதிமன்றில் கோரியிருந்தார்.

நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வழக்கு தொடர்பான உண்மைகளை உறுதி செய்த நீதிமன்றம் அமைச்சரை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற்ற உத்தரவு பிறப்பித்துள்ளது.

# 200 மின்சார பஸ்கள் விரைவில் சேவைக்கு!

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சார்பில் மேல் மாகாணத்தை உள்ளடக்கிய பகுதியில் பயன்படுத்துவதற்காக 50 மின்சாரப் பஸ்கள் முதற்கட்டமாக அரச–தனியார் கூட்டுத் திட்டமாக கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நன்மைகளை உறுதி செய்வதற்கும், அதிகமான வீதிகளுக்கு பொது போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் உத்தேச திட்டத்தின் கீழ் இயக்கப்படும் மின்சார பஸ்களின் எண்ணிக்கையை சுமார் 200 ஆக அதிகரிப்பது மிகவும் பொருத்தமானது என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த திங்களன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், உத்தேச திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் மின்சார பஸ்களின் எண்ணிக்கையை 200 ஆக அதிகரிப்பதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இலங்கையின் இனவாதப் போக்குக்கு சர்வதேச சமூகம் கடிவாளமிடவேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் இலங்கையின் வடக்கிலும்-கிழக்கிலும், தெற்கிலும் தனது கோரமுகத்தை மீண்டும் காட்டத் தொடங்கியுள்ளன. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய அரசாங்கமும் ஜனாதிபதியும் கண்டும் காணாமலும் உள்ளனர். எனவே சர்வதேச சமூகமும், குறிப்பாக இந்தியாவும், அரசாங்கத்தினதும் சிங்கள - பௌத்த இனவாத சக்திகளினதும் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்குக் கடிவாளமிடவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் இனவாத செயல்களைக் கண்டித்து ஓர் ஊடக அறிக்கையும் வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை மாதம் 20ஆம் திகதி இந்தியப் பிரதமரின் அழைப்பின்பேரில் டெல்லி சென்றிருந்தார். இதன்போது இந்திய-இலங்கை உறவு, பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் பேசப்பட்டமையுடன், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தலை நடாத்துமாறும், அதற்கான அதிகாரங்களை பதின்மூன்றாவது திருத்தத்தின் ஊடாக முழுமையாக வழங்குமாறும் இந்திய பிரதமர் கூறியிருந்தார். கொழும்பு திரும்பிய ஜனாதிபதி இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நீண்டதொரு உரையையும் ஆற்றியிருந்தார். நாடாளுமன்றத்தில் அவரது உரைக்கு கணிசமான அளவுக்கு எதிர்ப்பு இருந்ததுடன், சிங்கள பௌத்த இனவாத சக்திகள் அதனை முழுமையாக எதிர்த்தன.

இது ஒருபுறமிருக்க, வடக்கு-கிழக்கில் புதிய பௌத்த விகாரைகளை உருவாக்குவதிலும் சிங்கள மக்களை அங்கு குடியேற்றுவதிலும் சிங்கள பௌத்த துறவிகளும், தொல்பொருள் திணைக் களத்தினரும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். இதற்கான தமிழ் மக்களின் எதிர்ப்புகளும் போராட்டங்களும் வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இந்தச் சூழ் நிலையில், பதின்மூன்றாவது திருத்தத்தை நிறைவேற்றுவதைத் தடுத்து நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தமிழ்மக்களுக்குஎதிராகசிங்கள-பௌத்த இனவாதப் போராட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் வங்குரோத்து நிலையில் இருக்கின்ற சூழலில், ஜனாதிபதி ஒரு புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கும் முகங்கொடுக்க உள்ளார். இவ்வாறான சூழ்நிலையில், அரசிற்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டங்களைத் திசைதிருப்புவதை நோக்கமாகக் கொண்டும் இலங்கை அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் மேற்கண்ட போராட்டங்களுக்கு அரசு மறைமுக ஆதரவை வழங்குவதாகவே தோன்றுகின்றது.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே, இலங்கையில் சிங்கள இனவாதத்தை முன்னிறுத்திய தமிழர் விரோத அரசியலே தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு எதிராகவே தமிழர் தலைவரான தந்தை செல்வா ஒரு நீண்ட அறவழிப் போராட்டத்தை நடத்தினார். அவை அனைத்தும் அரச வன்முறையினால் ஒடுக்கப்



பட்டதன் காரணமாகவே கடந்த முப்பது வருடங்களாக ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆயுதப் போராட்டம் முடிவிற்கு வந்தாலும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இலங்கை அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை என்பதுடன், குறைந்தபட்சம் 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தைக்கூட நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கமோ ஜனாதிபதியோ தயாராக இல்லை என்பதே இன்றைய நிலைமை.

இலங்கையின் மீது சர்வதேச அழுத்தமும் குறிப்பாக இந்தியாவின் வலியுறுத்தலும் அதிகரித்துள்ள நிலையில், அடுத்து வரும் தேர்தல்களில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் இலங்கையின் ஜனாதிபதி இந்த அழுத்தங்கள் வலியுறுத்தல்களிலிருந்து தப்பிக்கொள்வதற்காக சிங்கள பௌத்த இனவாத சக்திகளின் பின்னாலிருந்து செயற்படுகிறார் என்றே தோன்றுகின்றது. எனவே, இலங்கை அரசினதும் சிங்கள பௌத்த இனவாத சக்திகளினதும் தந்திரங்களைப் புரிந்துகொண்டு அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச சமூகமும் குறிப்பாக இந்தியாவும் சிந்திக்க வேண்டிய தருணம் இது. - என்று உள்ளது.

# கந்தளாயில் காட்டு யானை மர்மான முறையில் மரணம்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் காட்டு யானையொன்று மர்மான முறையில் உயிரிழந்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் மாடு மேய்க்கச் சென்றவர்களால் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட தகவலுக்கமைய யானை உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த காட்டு யானை பத்து வயது தொடக்கம் பதின்மூன்று வயது உடையதாக இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானை இறந்துள்ளமை தொடர்பாக வனஜீவராசிகள் திணைகள அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த யானை நோய் வாய்ப்பட்டு இறந்துள்ளதா அல்லது வேறு காரணங்களினால் இறந்துள்ளதா என்



பது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மீண்டும் ஜனாதிபதி பதவியேற்பதில் தமக்குச் சிரமம் ஏதும் இல்லையாம்!

## மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்



மீண்டும் ஜனாதிபதியாகப் பதவியேற்பதில் தனக்கு சிரமம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடக நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிறிமாவோவுக்குப் பிறகு உலகையே வென்ற ஒரே அதிபர் தாம் தான் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில் –

“வெட்டினாலும் நீலம், பச்சை, சிவப்பு என்று சொல்பவர்கள் எந்த அரசியல் கட்சியிலும் இல்லை.

இன்று வணிகர்கள், அரசு ஊழியர், மீனவர்கள், சாதாரண குடிமகன் என யாருமே மகிழ்ச்சியாக இல்லை.

பாடசாலைகளில் போதைப்பொருள் பிரச்சினைகள் மிகவும் கடுமையானவையாக உள்ளன. இச்சிக்கல்களை எதிர்த்துப் போராடுவதற்கு மிகவும் பயனுள்ள நடவடிக்கைகள் தேவை என்பதை நாங்கள் காண்கிறோம்.

நம்மால் முடியும். கட்சி என்ற வகையில் அதற்கான தீர்வுகள் எங்களிடம் உள்ளன.

ஜனாதிபதியாகப் பணியாற்றியவர் என்ற வகையில், அந்த அனுபவங்களுடன் மீண்டும் ஜனாதிபதியாக இருப்பதில் எனக்கு சிரமம் இல்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குப் பிறகு எனது நல்லாட்சிக் காலம் முழு உலகையும் நான் வென்ற காலம் என்பதை நான் மிகத் தெளிவாகக் கூறுகின்றேன்.

13ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் செயற்படும் தகுதி இப்போதைய 8ஆவது ஜனாதிபதிக்கு இல்லை” என்றார்.

# ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் விபத்திற்கான இடைக்கால கொடுப்பனவிற்கு இணக்கம்



“எக்ஸ்பிரஸ் பேர்ள்” கப்பல் விபத்திற்கான இடைக்காலக் கொடுப்பனவிற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேவையான அறிவிப்புகள் கப்பலின் காப்புறுதி நிறுவனம் மற்றும் சட்டத்தரணி நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சமர்ப்பித்த இடைக்கால இழப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இந்த இழப்பீடு பெறப்படவுள்ளது.

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் இடைக்கால நட்டஈடாக 8 கோடி 90 லட்சம் டொலர் மற்றும் ஒரு கோடி அறுபது லட்சம் ரூபா கோரப்பட்டுள்ளது என சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடைக்கால இழப்பீட்டை வழங்குவதற்கு கப்பல் நிறுவனத்தின் காப்புறுதி நிறுவனமும் சட்டத்தரணிகள் நிறுவனமும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்தன.

அது தொடர்பான அரசாங்கத்தின் இணக்கப்பாட்டை அந்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சட்ட மா அதிபர் திணைக்களம் கூறியுள்ளது.

அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற பேச்சுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, இரு தரப்பினரும் இந்த இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்.

# அஸ்வெசும கொடுப்பனவுக்காக இன்று அரச வங்கிகள் திறப்பு

அஸ்வெசும கொடுப்பனவை வழங்குவதற்காக மாத்திரம் இன்றைய தினம் அரச வங்கிகளைத் திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, காலை 08 மணி முதல் மாலை 03 மணி வரை அனைத்து அரச வங்கிக்கிளைகளும் திறந்திருக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

முதல் கட்டத்தின் கீழ் 08 இலட்சம் குடும்பங்களுக்கான அஸ்வெசும நிவாரண நிதி வழங்கப்படுகின்றது.

இதற்கான நிதி, திறைசேரியினால் நேற்று முன்தினம் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டது.



# Pearl Island Inn

## Hotel & Restaurant

**Dine - in | Take Away | Soft Drinks**

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



# ராமநாதபுரத்தில் பிரதமர் போட்டியிட்டால் அவரை எதிர்த்துப் போட்டியிடுவேன்!

## - சீமான் உறுதி



ராமநாதபுரத்தில் பிரதமர் மோடி போட்டியிட்டால், மக்கள் மன்றத்தில் பிரதமரை நோக்கி பல கேள்விகளைக் கேட்க வேண்டியுள்ளது எனவும் அவரை எதிர்த்து நான் போட்டியிடுவேன் என்றும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் வில்லரசம்பட்டில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம் நடிகை விஜயலட்சுமி புகார் குறித்தும், இதன் பின்னால் அரசியல் பின்னணி ஏதாவது இருக்கிறதா என்றும் கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், அரசியல் பின்னணிக்கு வாய்ப்பு இருக்கிறது. இதில் நான் என்ன சொல்வது என்று தெரியவில்லை. இதை நான் ரொம்ப அமைதியாக கடந்துபோக வேண்டும் என்று நினைக்கிறேன். உலகம் முழுவதும் என்னை நேசிக்கிற பல கோடி குடும்பங்கள் இருக்கின்றன.

எனக்கு ஒரு மனைவி இரண்டு குழந்தைகள் என ஒரு குடும்பம் இருக்கிறது. சொந்த பந்தங்கள் இருக்கிறது. எனவே, இதுகுறித்து திரும்பத்திரும்ப பேசிக் கொண்டிருப்பது ரொம்ப கேவலமாக இருக்கிறது. இதில் எனக்கு ஒன்றும் இல்லை. நான் கடந்து வந்துவிடுவேன்.

ஆனால், என்னைச் சார்ந்தவர்களின் மனநிலை என்னவாக இருக்கும்? எனவே, இதை பேசிக் கொண்டிருக்க வேண்டியது இல்லை. நான் எவ்வளவோ வலிகளைத் தாங்கி கடந்து வந்தவன். என் இன சாவையே கண்முன் பார்த்தவன். எனவே இதெல்லாம் ஒரு விஷயம் இல்லை. எனவே, அதை விட்டுவிடுவோம், வேறு ஏதாவது பேசுவோம் என்று தெரிவித்துள்ளார்.

அப்போது ராமநாதபுரத்தில் பிரதமர் மோடி போட்டியிட பா,ஜ,கவினர் விருப்பம் தெரிவித்திருப்பது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், ராமநாதபுரத்தில் பிரதமர் மோடி போட்டியிட்டால், மக்கள் மன்றத்தில் பிரதமரை நோக்கி பல கேள்விகளைக் கேட்க வேண்டியுள்ளது.

எனவே, அவரை எதிர்த்து நான் போட்டியிடுவேன். அவர் போட்டியிடவில்லை என்றால், நான் போட்டியிட மாட்டேன். அந்தத் தொகுதிக்கு தங்கை ஒருவரை ஏற்கெனவே தேர்வு செய்து வைத்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

# சமையல் எரிவாயுவின் விலை 200 ரூபாவால் குறைக்கப்படும்!

## - மத்திய அரசு அறிவிப்பு

வீட்டு உபயோக சமையல் எரிவாயுவின் விலை 200 ரூபாவால் குறைக்கப்படுகிறது என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து டிடெல்லியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மத்திய அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், வீட்டு உபயோக சமையல் எரிவாயு பயன்படுத்தும் அனைத்துப் பயனாளிகளும் பயன் பெறும் வகையில் எரிவாயுவின் விலையை 200 ரூபாவால் குறைப்பதற்கு பிரதமர் நரேந்திர மோடி முடிவெடுத்துள்ளார்.

ரக்ஷா பந்தனை முன்னிட்டு நமது நாட்டின் பெண்களுக்கு பிரதமர் நரேந்திர மோடியின் பரிசு இது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் தற்போது 9.6 கோடி பயனாளிகள் உள்ளனர். மேலும், 75 லட்சம் பயனாளிகளைச் சேர்க்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. பிரதமரின் உஜ்வாலா திட்ட பயனாளிகளுக்கு ஏற்கனவே 200 ரூபா குறைவாக சமையல் எரிவாயு விநியோகிக்கப்படுகிறது. அவர்களுக்கு தற்போது மேலும், 200 ரூபா குறையும். அந்த வகையில், பிரதமரின் உஜ்வாலா திட்ட எரிவாயு பயனாளிகளுக்கு எரிவாயுவின் விலை 400 ரூபாவால் குறையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த அறிவிப்பை அடுத்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில், ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சியை அதிகப்படுத்தக்கூடிய விழா ரக்ஷா பந்தன். சமையல் எரிவாயு விலைக் குறைப்பு எனது குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு சகோதரிக்கும் கூடுதல் சவுகரியத்தைத் தரும். அவர்களது வாழ்க்கை மேலும் எளிதாகும். எனது ஒவ்வொரு சகோதரியும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதையே கடவுளிடம் நான் வேண்டுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாது: கர்நாடகா

காவிரி ஒழுங்காற்று குழு கூறியபடி, தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாது என்று கர்நாடகா தெரிவித்துள்ளது.

தமிழகத்துக்கு காவிரியில் இருந்து 15 நாட்களுக்கு 5000 கனஅடி தண்ணீர் திறக்க காவிரி ஒழுங்காற்று குழு நேற்று ,முன்தினம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடகா மாநில அமைச்சர் எம்.பி.பாடீல், எங்களிடம் தண்ணீர் இல்லை. காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவு நிறைவேற்ற முடியாத ஒன்று. எனவே, நாங்கள் சட்ட வழியைப் பின்பற்ற உள்ளோம்.

கர்நாடகாவின் குடிநீர் தேவை மற்றும் விவசாயத் தேவைக்கு இருக்கும் தண்ணீரை தமிழகத்துக்குக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். நாங்கள் எவ்வாறு கொடுக்க முடியும்? எனத் தெரிவித்துள்ளார்.

# 72 மணித்தியாலங்களில் வாக்னர் கூலிப்படையினர் கொல்லப்படலாம்!





ரஷ்யாவில் வாக்னர் கூலிப்படையினர் மீண்டும் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபடலாம் என அச்சம் உருவாகியுள்ளது.

இந்த நிலையில், அடுத்த 72 மணி நேரத்தில் வாக்னர் கூலிப்படையில் மீதமிருப்போர் கொல்லப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. வாக்னர் கூலிப்படையினரின் தலைவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பழிக்குப் பழி வாங்க வாக்னர் குழுவினர் உறுதிமொழி எடுத்துள்ளனர்.

அவர்கள் விரைவில் மீண்டும் ரஷ்யாவில் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபடலாம் எனவும் தகவல் கசிந்துள்ளது.

இந்த தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், புடின் விரைவாக நடவடிக்கை எடுப்பார் என்றும் அமெரிக்க முன்னாள் இராணுவ உளவுத்துறை அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அடுத்த 72 மணி நேரம் மீதமிருக்கும் வாக்னர் குழுவினருக்கு ஆபத்து என்றும், ஏனையவர்கள் சர்வதேச நாடுகளின் கவனம் ஈர்க்காமலேயே தற்கொலை செய்து உயிரிழக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## வர்த்தக உறவை மேம்படுத்துவதற்காக சீனாவுடன் கைகோர்க்கும் அமெரிக்கா!



வர்த்தக உறவை மேம்படுத்துவதற்காக சீனாவுடன் அமெரிக்கா கை கோர்க்கவுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வியடம் தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்த அமெரிக்காவின் வர்த்தகத்துறை அமைச்சர் ஜினா ரைமண்டோ 4 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக சீனா சென்றுள்ளார்.

இதன்போது வணிகம் மற்றும் சுற்றுலா துறையில் இரு நாடுகள் இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பது, பொருளாதார உறவில் ஏற்பட்ட விரிசலை சரிசெய்வது குறித்து சீன வர்த்தக துறை அமைச்சருடன் அமெரிக்க வர்த்தகத்துறை அமைச்சர் ஜினா ஆலோசனை நடத்தியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வான், உக்ரேன் –ரஷ்ய போர் உள்ளிட்ட சில பிரச்சினைகளால் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நிலவி வந்த மோதல் போக்கினால் இரு நாடுகளின் வர்த்தகமும் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

## கொரோனா சான்றிதழ் தேவையில்லை: சீனா அறிவிப்பு



சீனாவுக்குள் வருபவர்கள் கொரோனா இல்லை என்ற சான்றிதழ் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொரோனா தொற்று பரவலையடுத்து, வெளிநாட்டு பயணிகளுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டதுடன், தங்களது நாட்டுக்கு வருபவர்கள் கொரோனா இல்லை என்ற சான்றிதழை வைத்திருப்பதை பல நாடுகள் கட்டாயமாக்கியிருந்தன.

இந்த நிலையில், கொரோனா தடுப்பூசி, முகக்கவசம் போன்றவற்றால் அதன் பாதிப்பு தற்போது வெகுவாக குறைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியாவில் திருவிழாவில் பங்கேற்ற 85 பேர் கைது!

பிரித்தானியாவின் தலைநகரான லண்டனில், அண்மையில் இடம்பெற்ற கலாசார திருவிழாவில் பங்கேற்ற 85 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த திருவிழாவில் ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்களுடன் பங்குபற்றிய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

லண்டனில் கரீபிய மக்களின் கலாசாரம், கலைகள் மற்றும் பாரம்பரியத்தைக் கௌரவிக்கும் விதமாக ஆண்டுதோறும் ஓகஸ்ட் மாதத்தின் இறுதிவாரத்தில் 'நொட்டிங் ஹில்' என்ற கலாசார திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் சுமார் 50,000 க்கும் மேற்பட்ட கலைஞர்களுடன் இந்த திருவிழா கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது.



# இந்திய பண வளக் கலை நிபுணர் குழுவினர் கபில்வத்தைக்கு யாத்திரை

( வி.ரி.சகாதேவராஜா)

பிரபல இந்திய பண வளக்கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த் சகிதம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் நேற்று (29) செவ்வாய்க் கிழமை காலை ஆதி கபில்வத்தைக்கு யாத்திரை ஆரம்பமாகிறது. இன்று செவ்வாய்க்கிழமை மொனராகலையிலிருந்து ஆரம்பமாகிறது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான 30 பக்தர்கள் அடங்கிய குழுவினர் இதில் பங்கு பற்றுகின்றனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் ஏற்பாட்டில் நமசிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலில் தியாகராஜா ஜீ, சமய ஆர்வலர்களான வி.ரி.சகாதேவராஜா, கே.ஜெயசிறில் உள்ளிட்டோர் பயணமாகவுள்ளனர்.

அதேவேளை, இரு தினங்கள் கபில்வத்தையில் தங்கியிருந்து வழிபாடு செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொலித்தீன் பைகளின் பாவனைக்கு நல்லூர் ஆலயச் சூழலில் தடை!

யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஆலய சூழலில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பைகளை வைத்திருந்த 35 கடை உரிமையாளர்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடுமையான எச்சரிக்கை விடுத்து, அந்தப் பைகளைக் கடைகளில் இருந்து அகற்றப் பணித்தனர்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரி தெரிவிக்கையில் –

20 மைக்ரோன் தடுப்புக்கு குறைந்த பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, லஞ் சீற்றுக்கள் 100 வீதம் உக்கும் தன்மையுடைய வையாகக் காணப்பட வேண்டும். அதனை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 08 மாத கால பகுதியில், தடை செய்யப்பட்ட பொலித்தீன்களை வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நல்லூர் மகோற்சவ காலங்களில் ஆலய சூழலில், கச்சான் கடைகள், இனிப்புக் கடைகள், காரம் சுண்டல் கடைகள் என பெருமளவான தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த கடைகளில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பாவனைகள் அதிகளவில் காணப்பட்டமையால் அவர்களுக்கு முதல் கட்டமாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் நாள்களிலும் பொலித்தீன்களை பாவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

அதேவேளை, ஆலயத்திற்கு பூக்கள், அர்ச்சனை பொருள்களைப் பக்தர்கள் கொண்டுவரும்போது, அவற்றைப்பொலித்தீன் பைகளில் கொண்டு வருகின்றனர்.

அவ்வாறானவர்களுக்கு பாடசாலைகளில் சுற்றாடல் முன்னோடிக்குழு மாணவர்கள், ஆசிரியர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் ஆகியோர் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, பொலித்தீன் பைகளை பெற்றுக்கொண்டு அவற்றுக்கு மாற்றீடாக துணிப்பைகளை வழங்கும் நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

# உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள்







(நூருல் ஹுதா உமர்)

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலயம் மற்றும் வெளிநாட்டுத் திட்டப் பிரிவு இணைந்து கிராமத்தில் வேலையற்ற இளைஞர்களின் ஊடாக உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலயம் மற்றும் வெளிநாட்டு திட்டப் பிரிவு ஆகியவற்றின் நிதி அனுசரணையில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் செயற்படுத்தலின் கீழ் கிராமிய உற்பத்திகளை பொதியிடும் நிலையம் மற்றும் கிராமிய உற்பத்திகளுக்கான கண்காட்சியும் சம்மாந்துறை சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் இன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் கௌரவ அதிதியாக பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் புவனேஸ்வரி சபாரத்தினம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் கங்கா சாகரிகா, நிஸ்கோ பணிப்பாளர் எஸ். சிறிவர்த்தன, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி யூ.எல். முபாரக் அலி, கிழக்கு மாகாண சொற்பொழிவாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் யுவஸ்ரீ கலா பாரதி சிவஸ்ரீ க.வி. பிரமீன்சர்மா, சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் எஸ். ஜெயச்சந்திரன், அகோரமாரியம்மன் ஆலயத்தின் செயலாளர் அழகுராஜன், உபதலைவர் மோகன், கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் இளங்கோபன், பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஏ. எல். இஸ்மாயில், மட்டக்களப்பு தரவை - 2 கிராம சேவகர் எஸ்.எம். பரீட், சமூர்த்தி உத்தியோகத்தர் சித்தி ஹிதாயா மற்றும் நியூ சன் ஸ்டார் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

# நலன்புரிக் கொடுப்பனவு பெறுவதில் தவறு இடம்பெற்றால் சட்ட நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



தவறான தகவல்களை வழங்கி நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதுவரை முறைகேடான வகையில் பெற்றுக்கொண்ட நலன்புரி கொடுப்பனவுகள் அனைத்தும் மீள அறவிடப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அஸ்வெசும நலன்புரித்திட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 லட்சம் பயனாளர்களில் வங்கி வைப்பு உள்ளிட்ட சரியான தகவல்களை வழங்கிய 8 லட்ச பயனாளர்களுக்கு கடந்த மாதத்துக்கான கொடுப்பனவுகளை வழங்க திறைச்சேரி நேற்றைய 5 பில்லியன் ரூபாவை சகல அரச வங்கிகளுக்கும் விடுவித்துள்ளது.

அரச வங்கிகளின் பிரதானிகளுடன் விசேட பேச்சு வார்த்தையில் ஈடுபடவுள்ளோம். பயனாளர்கள் எவ்வித அசௌகரியங்களும் இல்லாமல் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பிரத்தியேக வழிமுறைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தவுள்ளோம்.

தவறான தகவல்களை வழங்கி நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இதுவரை காலமும் முறைகேடான வகையில் பெற்றுக்கொண்ட கொடுப்பனவுகள் அனைத்தும் மீண்டும் அறவிடப்படும்.– என்றார்.



# அரங்கு நிறைந்து மக்கள் வாழ்த்த யாழில். பரத நாட்டிய அரங்கேற்றம்

வேம்படி மகளிர் உயர்தரப்பாட சாலையின் தரம் 11 மாணவியும் ஏழிசை மிருதங்க நர்த்தனாலய நுண் கலைமாணி கலாவித்தகர் திருமதி பாலினி கண்ணதாசனின் மாணவியு மான செல்வி றஜீபன் அபிநயாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் 20 ஆம் திகதி யாழ்ப்பாண கலாசார மண்ட பத்தின் இடம்பெற்றது.

வாழ்நாள் பேராசிரியர் அ.சண முகதாஸ் மற்றும் முனைவர் மனோன் மணி சண்முகதாஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் அரங்கு நிறை திரளான மக்களோடு வெகுவிமர்சையாக அரங்கேற்றம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். இந்திய துணைதூதுவர் ஆ. நடராஜன் பிர தம விருந்தினராகவும் ஜனாபதிதேசிய செயலக மேலதிக செயலாளர் இ.இளங் கோவன் விசேட அதிதியாகவும் யாழ்ப் பாண பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கி. விசாகரூபன். பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ் துறைத்தலைவர் ஸ்ரீபிரசாந் மற்றும் யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய முன்னாள் அதிபரும் மன்னார் சென். அன்ரனீ பாடசாலை தற்போதைய அதிபரும் ஆன அருட்சகோதரி மேரி றொசாந்தி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.







# சாதாத் ஞாபகார்த்த வெற்றி கிண்ணம் ஏறாவூர் அப்துர் றஹ்மான் வெற்றி




(அஸ்ஹர் இப்றாஹிம் )

மர்ஹூம்.ஐ.எம்.சதாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண 20 ஓவர்கள் மட்டுப் படுத்தப்பட்ட கிறிக்கெட் தொடரில் ஏறா வூர் அப்துர் றஹ்மான் விளையாட்டுக் கழகத்துக்கும், சில்வர் பிஸ் விளை யாட்டுக்கழகத்துக்கும் இடையிலான போட்டி அண்மையில் ஏறாவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்படுத்தாடிய ஏறாவூர் அப்துர் றஹ்மான் அணியினர் நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட் டுக்களை இழந்து 242 ஓட்டங்கள் பெற்றனர் .

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ஸயான் இர்ஷா 76 ஓட்டங்களையும் சிரேஷ்ட வீரர் முஹம்மட் நிம்ஸாத் 64 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்த னர்.

பதிலுக்கு துடுப்படுத்தாடிய சில்வர் பிஸ் அணியினர் 20 ஓவர்களில் 9 விக் கெட்களை இழந்து 176 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக அணித் தலைவர் ஸயான் இர்ஷா தெரிவு செய்யப்பட்டார்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.08.2023




வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் இன்று காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். தியானம் மற்றும் பிரார்த்தனை உங்களுக்கு மன ஆறுதல் தரும்.

பணியில் வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் தனித்த திறன் காரணமாக பணியில் சாதகமான பலன்களைப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். மகிழ்ச்சியும் திருப்தியும் நிலவும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் போதிய அளவு பணம் பராமரிப்பீர்கள். இன்று முக்கியமான நிதி சம்பந்தமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உற்சாகமான நாள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும் நாள் உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள். எதிரிகளை வெல்வீர்கள்.

நீங்கள் சுயநலமின்றி கடுமையாக உழைப்பீர்கள். இதனால் பணியிடத்தில் சிறப்பாக பணி புரிவீர்கள். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் துணை-யுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துவீர்கள். உங்கள் துணையின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள்.

நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். லாபகரமான முதல-டுகளில் பங்கு கொள்ளலாம்.

உங்களிடம் இருக்கும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது.சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். பிரார்த்தனை மற்றும் இறைவழிபாடு ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது பொறுமை தேவை. சக பணியாளர்களின் தொல்லைக்கு ஆளாவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவு அதிகமாக இருக்கும்.

அஜீரணக் கோளாறு இன்று காணப்படும். அதிக நீரைப் பருகுவது நல்லது. நேரத்திற்கு உணவு உட்கொள்ள வேண்டும்.




இன்று திருப்தியற்ற நிலை இருக்கும். இது உங்களுக்கு சிறிது கவலை அளிக்கும். அதிகம் சிந்திப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்காது. உங்கள் மேலதிகாரியுடன் சில வெறுப்பான தருணங்களை சந்திக்க நேரும்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு அமைய நீங்கள் அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இதனால் இன்று நல்ல சூழ்நிலை காணப்படும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கையாளும் போது கூடுதல் கவனம் தேவை.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று மிகவும் சிறப்பான நாள். எதிர்பாராத நன்மைகள் காணப்படும். உங்களின் சயோஜித புத்தி கொண்டு இன்றைய நாளை சிறப்பாக ஆக்குவீர்கள்.

உங்கள் பணியின் தரம் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். நீங்கள் இன்று விரைந்து பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல மனநிலையில் இருப்பீர்கள். இதனால் இருவரிடையே அன்பு அதிகரிக்கும்.

தேவைப்படும் சமயத்தில் பணம் உங்களிடம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

பொதுவாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வீட்டில் விருந்தினர் வருகை இருக்கலாம். இதனால் நீங்கள் உற்சாகமடைய வாய்ப்புள்ளது. இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் வெற்றியும் அதனால் மகிழ்ச்சியும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் நல்ல கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் இனிமையான தொடர்பாடல் மூலம் உங்கள் துணையிடம் நம்பிக்கையான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும்.

பணம் சம்பந்தப்பட்ட தேவைகள் பூர்த்தியாகும். பூர்வீகச் சொத்து வகையில் பண வரவிற்கு வாய்ப்பு உள்ளது.




இன்று சவாலான நாளாக இருக்கும். உங்களிடம் பதட்டம் காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். உங்கள் யுக்திகளை திட்டமிட்டு தொழில் சார்ந்த முறையில் பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் அமைதியின்மை உணர்வு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சி நிலவ இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும்.

நிதியைப் பொறுத்தவரை இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று முதுகு வலி காணப்படும்.




உங்களின் சிறந்த முயற்சிகளிலும் தடைகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். இன்று உங்களிடம் அமைதியின்மையும் பதட்டமும் காணப்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் உதவிகரமாக இருக்கும்.

இன்று பணியில் சிறிது ஏமாற்றம் காணப்படும். பணியில் தவறுகள் செய்ய வாய்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உங்களுக்கு நல்லதல்ல. இது உங்கள் மகிழ்ச்சியை கெடுக்கும்.

அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இன்று பண வரவு குறைந்து காணப்படும்.

அதிக பதட்டம் காரணமாக இன்று சோர்வுடன் காணப்படுவீர்கள். தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -30.08.2023

## தனுசு

இன்று அபாரமான வாய்ப்புகள் கிடைக்கும் நாள். உங்களின் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளும் தன்னம்பிக்கை காணப்படும். நீங்கள் முடிவுகள் எடுப்பதில் ஸ்திரமாக இருப்பீர்கள்.

பதவி உயர்வு வகையில் பாராட்டு கிடைக்கும். உங்கள் திறமை மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொண்டு இருவரும் மகிழ்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று உங்களின் தரமான நேரத்தை கழிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் கூடுதல் பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## கும்பம்

இன்று வளர்ச்சி குறைவாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். நீங்கள் சாதகமான பலன்களை எதிர் பார்ப்பீர்கள். வெற்றி பெற வேண்டும் என நினைத்தாலும் அதை அடைவது சிறிது கடினமாக இருக்கும்.

சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனை மறப்பது நல்லது. உங்கள் இலக்குகளை முடிப்பதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் புத்திசாலித்தனமாகவும் நகைச் சுவை யுடனும் நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் இன்று மகிழ்ச்சி காணப்படாது.

இன்று அதிர்ஷ்டகரமான நிதி நிலைமை இருக்காது. அதிக செலவுகள் உங்களுக்கு கவலை அளிக்கும். நிதி நிலைமையில் சற்று கடினமான சூழல் காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மகரம்

விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். என்றாலும் நீங்கள் தனித்திருப்பது போல உணர்வீர்கள். இது வெறும் உணர்வு தான். இறைவழிபாடு மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணியிடத்தில் சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் பணியில் சில தவறுகள் செய்வீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்திற்கு செல்லும்.

உங்கள் துணையிடம் அகந்தைப்போக்கை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று அதிக பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. குடும்பப் பொறுப்பு காரணமாக இன்று அதிக பணச் செலவை எதிர்கொள்ள நேரும்.

## மீனம்

இன்று நீங்கள் விரைவாகவும் தீர்மானமாகவும் செயல்படுவீர்கள். இன்றைய நாளை நீங்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் பொது விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் நண்பர்களைப் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேலதிகாரிகள் மதிப்பீடு செய்யும் வாய்ப்பு உள்ளது. உங்களின் படைப்பு திறன் காரணமாக உங்கள் திறமை சிறப்பாக வெளிப்படும்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இதனால் இன்று உங்களுக்கு மிகவும் பயனுள்ள நாளாக இருக்கும்.

சிறு கடன் வகையில் உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அந்தப் பணத்தை உங்கள் குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.

